தமிழ்நாடு மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைதாவதைத் தடுக்க

நிலையான -உறுதியான தூதரக முயற்சிகளை மேற்கொள்வீர்!

முதல்வர் மு.க.ஸ்டாலின் – ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சருக்குக் கடிதம்!

சென்னை, பிப். 25 - இலங்கைக் கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்ட தமிழ்நாடு மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிப்ப தற்கும், தமிழ்நாடு மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்திட உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 12 மீனவர்கள் 22.02.2026 அன்று இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடு மீனவர்கள் தொடர்ந்து இவ்வாறு கைது செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்தவும், இலங்கைக் காவலில் உள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடு விப்பதற்கு உரிய தூதரக நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளவும் வலியுறுத்தி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று முன்தினம் (23.02.2026) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், இராமநாதபுரம் மாவட்டம், பாம்பன் மீன்பிடி இறங்கு தளத்திலிருந்து, இயந்திரப் படகில் மீன் பிடிக்கச் சென்ற இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 12 தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் 22.2.2026 இரவு கைது செய்யப்பட்டுள்ளதை தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் மற்றும் அவர்களது மீன்பிடிப் படகுகள் இலங்கை அதிகாரிகளால் தொடர்ந்து இதுபோன்று சிறை பிடிக்கப்படுவதும், மீனவர்கள் தொடர்ச்சியாக தடுப்புக் காவலில் வைக்கப்படுவதும் மிகுந்த கவலை அளிப்பதாகக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், தற்போதைய நிலவரப்படி, தமிழ்நாட்டைச் சேர்ந்த 259 மீன்பிடிப் படகுகளும், தற்போதைய சம்பவத்தில் கைது செய்யப்பட்டவர்கள் உட்பட 116 மீனவர்களும் இலங்கை காவலில் உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தத் தொடர்ச்சியான கைது நடவடிக்கைகள், கடலோர சமூகத்தினரிடையே வாழ்வாதாரம் மற்றும் பாதுகாப்பு குறித்து ஆழ்ந்த பதட்டத்தையும், நிச்சயமற்ற தன்மையையும் ஏற்படுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், நமது மீனவர்கள் இதுபோன்று கைது செய்யப்படுவதைத் தடுக்க நிலையான மற்றும் உறுதியான தூதரக முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம் என்று தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு மீனவர்கள் மீண்டும் கைது செய்யப்படுவதைத் தடுத்து நிறுத்திடவும், இலங்கைக் காவலில் உள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடு விப்பதற்கு உரிய தூதரக நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலை! கே.எஸ்.எம். நாதன் தலைமை!

எழும்பூர் தெற்கு பகுதியில் 'மக்கள் முதல்வரின் மனிதநேய விழா' மாபெரும் வாழ்த்தரங்கம்!

நடிகர் பிரபு – நடிகர் போஸ் வெங்கட் – கவிஞர் சினேகன் சிறப்புரை!

சென்னை, பிப்.25

சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் தெற்கு பகுதியில் கழகத் தலைவர் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளையொட்டி மக்கள் முதல்வரின் மனிதநேய விழா 2026, மனிதநேயம் 19, கழகத் தலைவர் அரசியல் திலகம்! கலையும் அன்பும் கலந்த இதயம்!! என்ற தலைப்பில் மாபெரும் வாழ்த்தரங்கம் நாளை வியாழக்கிழமை (26.02.2026), மாலை 6 மணிக்கு ஒய்.எம்.சி.ஏ. அரங்கம், ரித்தர்டன் சாலை, டவுட்டனில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலையில் தலைமை செயற்குழு உறுப்பினர் கே.எஸ். எம். நாதன் தலைமையில் மாபெரும் வாழ்த்தரங்கம் நடைபெறுகிறது.

இம்மாபெரும் வாழ்த்தரங்கில் திரை கலைஞர் இளைய திலகம் பிரபு, கழக கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணைத் தலைவர் நடிகர் போஸ் வெங்கட், மக்கள் நீதி மையம் இளைஞரணிச் செயலாளர் கவிஞர் சினேகன் ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர்.

இக்கூட்டத்தில் மேயர் பிரியா, தயாநிதி மாறன் எம்.பி., பகுதிச் செயலாளர்கள் வி. சுதாகர், சொ. வேலு எம்.சி., மாவட்ட அவைத் தலைவர் கோ.ஏகப்பன், புனிதவதி எத்திராசன் எம்.சி., பா. ஸ்ரீராமுலு எம்.சி., பரிதி இளம் சுருதி எம்.சி., வே. உமா காந்த், எஸ் மணி முடி, ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி., வானவில் விஜய், அ. நிர்மலா தேவி, கோ. மணி, எஸ் சுந்தர்ராஜன் எம்.சி., பாத்திமா முசாபர் எம்.சி.,

எழும்பூர் தெற்கு பகுதி கழக நிர்வாகிகள் எஸ்.ரசூல், டி.வி.வேலு, எம்.மலர்மாறன், கே.அன்னபூரணி, எஸ்.ஜெகதீசன், தெற்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் எஸ்.டால்பின் ஹரி, இ.மொய்தீன், வான்மதி கதிரவன்,

சட்டமன்ற உறுப்பினர்கள் ப. தாயகம் கவி, இ. பரந்தாமன், அ. வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல் மற்றும் கே.எஸ். ரவிச்சந்திரன், தமிழன் பிரசன்னா, பி.எம்.யாழினி உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்.

இறுதியில் 58வது வட்டச் செயலாளர் வி. விஜயகுமார், 58 (அ) வட்டச் செயலாளர் ஆர். பாபு (எ) சந்திரசேகரன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

திருக்குறள் திருப்பணிகள் திட்டத்தினால் பலர் பயன் பெற்றுள்ளனர்!

குறள் நிறைவு விழாவில் கவிஞர் பேரா பெருமிதம்!

நெல்லை, பிப்.25- நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை குழந்தை இயேசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் 21.02.2026 அன்று நடந்த திருக்குறள் திருப்பணிகள் திட்ட 30 ஆவது வார நிகழ்ச்சியில் "திருக்குறள் திருப்பணிகள் திட்டத்தால் பலர் பயனடைந்துள்ளனர்" என பயிலரங்கக் குழுத் தலைவர் கவிஞர் பேரா என்ற பே.இராஜேந்திரன் பேசினார்.

கன்னியாகுமரி முனையில் அமைக்கப்பட்டிருக்கும் வள்ளுவர் சிலை வெள்ளிவிழா நிகழ்ச்சியின் போது தமிழ்நாடு முதல்வர் மு .க. ஸ்டாலின் அறிவித்த திருக்குறள் திருப்பணிகள் திட்டம் தமிழ்நாடு முழுவதும் 38 மாவட்டங்களிலும் நடைபெற்று வருகிறது.

இந்தத் திட்டத்தின் படி ஒவ்வொரு மாவட்டத்திலும் மூன்று பயிற்சிக் குழுக்கள் அமைக்கப்பட்டு ஒவ்வொரு பயிற்சிக் குழுவும் 30 வாரங்கள் பயிலரங்கம் நடத்திட முடிவு செய்யப்பட்டிருந்தது.

அதன்படி திருநெல்வேலியில் மாவட்டத்தில் கவிஞர் பேரா தலைமையில் உள்ள பயிலரங்கக் குழுவில் 30 ஆவது நிறைவு பயிலரங்கம் 21.02.2026 அன்று நடைபெற்றது .

நிகழ்ச்சிக்கு எழுத்தாளர் தளவாய் வரவேற்புரை வழங்கினார்.

திருக்குறள் திருப்பணிகள் திட்ட கண்காணிப்புக் குழு உறுப்பினரும் பயிலரங்கக் குழுத் தலைவருமான கவிஞர் பேரா என்ற பே. இராஜேந்திரன் தலைமை வகித்தார்.

அவர் தலைமையுரை ஆற்றும்போது, "தமிழ்நாட்டில் திருக்குறள் விழிப்புணர்வை ஏற்படுத்தி அறிவுசார் மாநிலமாக தமிழகத்தை உருவாக்க வேண்டும் என்கின்ற உன்னத நோக்கத்தோடு தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் தந்த திட்டம்தான் திருக்குறள் திருப்பணிகளை திட்டம் ஆகும்.

தமிழ் வளர்ச்சித் துறையால் நடத்தப்படும் இய்திட்டத்தின்படி அனைத்து மாவட்டங்களிலும் வாரந்தோறும் பயிரங்கம் நடைபெற்று வருகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் என்னுடைய தலைமையில் உள்ள பயிலரங்கக் குழு 30 ஆவது வார நிறைவு நிகழ்வை இன்று நடத்துகிறது.

இன்று பிப்ரவரி 21 உலக தாய்மொழி நாள் ஆகும். இந்த சிறப்பான நாளில் இந்தத் திட்டத்தின் நிறைவு நாள் நிகழ்ச்சியை நடத்துவது மிக பொருத்தமானதாகும்.

தமிழ் மொழிக்காக தமிழ் நாடு அரசு எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வருவதையும் இந்த நேரத்தில் நாம் நினைத்துப் பார்க்க வேண்டும். இந்த திட்டமும் மொழி வளர்ச்சிக்கான ஒரு திட்டம் தான்.

இந்தத் திட்டப் பயிலரங்குகளின் முதல் நிகழ்வு 08.2025 அன்று பாளையங்கோட்டை அரசு அருங்காட்சியகத்தில் நடத்தப்பட்டது.

தொடர்ந்து பாளையங்கோட்டை குழந்தை யேசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி, அரசு நூலகம், ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரி, செவிலியர் பயிற்சி நிறுவனம் தூய இஞ்ஞாசியார் கல்வியியல் கல்லூரி என பல இடங்களிலும் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன.

பொதுமக்களுக்கு பயிலரங்கம், கருத்தரங்கம் எனவும் கல்லூரி பள்ளி மாணவ மாணவிகளுக்கு பயிற்சி வகுப்புகள் எனவும் நடத்தப்பட்டுள்ளன.

இயல்பான பயிலரங்குகளைத் தாண்டி வினாடி வினா, குறள் கதை சொல்லல், குறள் நாட்டியம், குறள் சொல்லும் போட்டி, நூலைப் பார்த்து குறள் வாசித்தல், குறள் ஒப்பித்தல், ஒரு குறள் ஒரு குரல் என்ற அனைவரும் மேடையேறி குறள் சொல்லல், பொருளுக் கேற்ப குறள் சொல்லுதல் என வித்தியாசமான முறைகளில் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு ள்ளன.

இதன் வாயிலாக ஏராளமான பள்ளி கல்லூரி மாணவ மாணவிகளும் பொதுமக்களும் திருக்குறள் பற்றிய பல செய்திகளை கேட்டு பயன்பெற்று இருக்கிறார்கள் என்பது உண்மை. சமூகத்தில் திருக்குறள் விழிப்பூணர்வு ஏற்பட்டுள்ளது என்பதும் உண்மை.

இதன் மூலமாக இத்திட்டம் பெரும் வெற்றி பெற்றிருப்பதை நான் பெருமையோடு சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன்.

இந்தத் திட்டத்தின் வெற்றியால் நமது முதல்வர் அவர்களின் புகழ் இன்னும் உயர்ந்திருக்கிறது.

இத்தகைய நிகழ்வுகளை நடத்த வாய்ப்பளித்த மாவட்ட ஆட்சித் தலைவர், தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் குறிப்பாக என்னோடு பயணித்த பயிற்றுநர்கள் கவிஞர் வ.பாமணி, ந. வனசெல்வி, சிவ.செல்வ மாரிமுத்து ஆகியோருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து மகிழ்கிறேன்"

....என கவிஞர் பேரா தனது தலைமையுரையில் பெருமிதம் கொண்டார்.

அவரது தலைமையுரையைத் தொடர்ந்து இந்தக் குழுவின் பயிற்றுநர்கள் கவிஞர் பாமணி, சிவ செல்வம் மாரிமுத்து, ந.வனசெல்வி ஆகியோர் குறளுரை வழங்கினர்.

சிறப்பு அழைப்பாளராக நெல்லை மண்டில தமிழ் வளர்ச்சித் துணை இயக்குநர் அலுவலக கண்காணிப்பாளர் ஜெகன் கலந்துகொண்டார்.

தொடர்ந்து மாணவிகளின் கலந்துரையாடல் நடைபெற்றது.

நிகழ்ச்சியின் நிறைவில் கலந்து கொண்ட அத்தனை மாணவிகளுக்கும் திருக்குறள் புத்தகம் பரிசாக வழங்கப்பட்டது.

நிறைவாக அனைவரும் உலகத் தாய்மொழி நாள் உறுதிமொழி எடுத்தனர்.

ஆசியியை ரஜுலா நன்றியுரை வழங்கினார்.

நிகழ்ச்சியில் ஏராளமான மனைவிகளும் ஆசிரியர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நிறைவாக அனைவருக்கும் தேநீர் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை பயிலரங்கக் குழுத் தலைவர் கவிஞர் பேரா சிறப்பாக செய்திருந்தார்.